# 2. தோட்டக்கலை

**1. முன்னுரை**

தோட்டக்கலை அதிக வருவாய் தரக்கூடிய ஒரு முக்கியமான அங்கமாக திகழ்கிறது. தமிழ் நாட்டில் நிலவும் ஏழு வகையான தட்பவெப்ப சூழ்நிலைகள் மற்றும் மண்வளம், பழங்கள், காய்கறிகள், மூலிகைப் பயிர்கள், வாசனைப் பயிர்கள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்கள் பயிர் செய்ய ஏற்றதாக உள்ளது. இத்துறையின் வளர்ச்சி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தையும், வருமானத்தையும் மற்றும் கிராம வேலை வாய்ப்பையும் அதிகரித்து உள்ளது. மேலும் தமிழ்நாடு மலர்கள் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது.

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பு மொத்த சாகுபடி பரப்பில் ஐந்தில் ஒரு பங்காக இருந்தபோதிலும் மொத்த வேளாண் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது,

பழங்கள், காய்கறிகளில் உள்ள சத்துக்கள் குறித்த முக்கியத்துவம் உணரப்பட்டு அதன் தேவைகள் பெருகி வருகிறது. தோட்டக்கலைப் பயிர்களில் உயரிய தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்கப்படுவதால் அதன் தரம் மற்றும் உற்பத்தி கணிசமாக உயர்ந்து விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய மாற்றுப் பயிர்கள் ஆகும். எனவே, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தி கடந்த ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்து வருகிறது. 2012–13ம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சாகுபடி பரப்பளவை அதிகரித்து உயரிய தொழில்நுட்பங்களை கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

-



**2. கொள்கை கோட்பாடுகள்**

1. தோட்டக்கலை துறையில் இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்தும் வகையில் உற்பத்தியை இரண்டு மடங்காக்குதல்.
2. உயர் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து, நிலைத்த இலாபம் தரக்கூடிய துறையாக தோட்டக்கலைத் துறையை உயர்த்துதல்.
3. விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே இத்துறையின் நோக்கம்.
4. சந்தைக்கேற்ப உற்பத்தியை ஊக்குவித்தல்
5. இயற்கை வேளாண்மையை ஒரு வாழ்வியல் முறையாக ஊக்குவித்தல்.
6. தோட்டக்கலையின் அனைத்து அம்சங்களிலும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்.
7. பண்ணை இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல்.

**3. உத்திகள்**

1. தோட்டக்கலை சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர்த்துதல்.
2. தரமான மரபுத்தூய்மையுடைய நடவுக்செடிகளின் உற்பத்தி மற்றும் வழங்கு திறனை அதிகரித்தல்.
3. இடுபொருட்களான – உயர் விளைச்சல்/வீரிய இரக விதைகள், இராசயன உரங்கள் உயிர் உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றை உரிய நேரத்தில் வழங்குதல்
4. பல்லாண்டு பயிர்களில் அடர் நடவு முறையை ஊக்குவித்தல்.
5. துல்லியப் பண்ணையத்தின் மூலம் பாசன நீர் மற்றும் உரங்களின் முழுமையான பயன்களை அடைதல்.
6. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.

7. கிளைமேலாண்மை மற்றும் பழைய தோட்டங்களை புதுப்பித்தல்.
8. நவீன அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்தல்.
9. தோட்டக்கலை விளை பொருட்களை தேசிய மற்றும் உலக அளவிலான சந்தையை அடையும் வகையில் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து வசதிகளை அளித்தல்.
10. சில்லரை விற்பனை நிலையங்கள் வாயிலாக தோட்டக்கலை விளைபொருட்களை நுகர்வோருக்கு கிடைப்பதை உறுதி செய்தல்.
11. பல்வேறு வழிமுறை மூலம் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
12. தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக தோட்டக்கலை விளைபொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் சந்தை இணைப்பு ஆகியவற்றின் திறன் மேம்படுத்துப்படுவதன் மூலம் விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பை உறுதி செய்தல்.
13. நிர்வாகம், தகவல் பரிமாற்றம், விரிவாக்கம், விற்பனை ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில்நுட்ப தகவல்களை விரைவாக சென்றடையச் செய்தல்.
14. மானாவாரி பகுதிகளில் தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்
15. துறை அலுவலர்கள்/விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான திறனை மேம்படுத்துதல்.
16. தோட்டக்கலைப் பயிற்சி நிலையங்களின் உள்ளீட்டு வசதிகளை அதிகரித்தல்.
17. கிராமபுறங்களில் தோட்டக்கலையை வேளாண்மை, கால்நடை, மரம் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியவற்றோடு ஒருங்கிணைத்தல், நகர்ப்புறங்களில் மாடித் தோட்டங்கள் அமைத்தல் போன்றவற்றை ஊக்குவித்தல்.



18. சுற்றுலாவை கவரும் வகையில் புதிய தோட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பூங்காக்களை மேம்படுத்துதல்.
19. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்ள வளங்களை திறம்பட பயன்படுத்துதல்.

**4. தோட்டக்கலைப்பயிர்கள் பரப்பு, உற்பத்தி – 2010–2011, 2011–2012 & 2012–2013**

(பரப்பு : இலட்சம் எக்டர்., உற்பத்தி : இலட்சம் மெட்ரிக் டன்., )

| வ, எண் | பயிர் விபரம் | 2010 – 2011 ஒத்திசைவு | | 2011 – 2012 கணக்கிடப்பட்டது | | 2012 – 2013 எதிர்பார்ப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | பரப்பு | உற்பத்தி | பரப்பு | உற்பத்தி |
| 1 | பழங்கள் | 3.20 | 79.65 | 3.32 | 85.35 | 3.72 | 101.94 |
| 2 | காய்கறிகள் | 2.73 | 83.87 | 2.84 | 90.52 | 3.18 | 107.59 |
| 3 | நறுமணப் பயிர்கள் | 1.66 | 9.39 | 1.73 | 10.87 | 2.10 | 15.11 |
| 4 | மலை தோட்டப் பயிர்கள் | 2.65 | 11.47 | 2.75 | 11.99 | 3.04 | 13.86 |
| 5 | மலர் பயிர்கள் | 0.31 | 3.00 | 0.32 | 3.23 | 0.39 | 4.21 |
| 6 | மூலிகை, வாசனைப் பயிர்கள் | 0.11 | 0.61 | 0.12 | 0.68 | 0.12 | 0.72 |
| **மொத்தம்** | | **10.66** | **187.99** | **11.08** | **202.64** | **12.55** | **243.43** |

## 5. மாநிலத் திட்டங்கள்

### 5.1 ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல் / வீரிய ஒட்டு காய்கறி மற்றும் மலர் விதைகள் 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு பழப் பயிர்களுக்கு 1 எக்டர் வரையிலும், மலர்கள் மற்றும் உயர் விளைச்சல் / உயர்ரக காய்கறி விதைகளுக்கு ஒரு விவசாயிக்கு 0.5 எக்டர் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ.371.18 இலட்சம் செலவில் 26,583 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. 2012–2013 ஆம் நிதியாண்டில்

75000 எக்டர் பரப்பளவில் ரூ.1925 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தினை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2 தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள்

இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை, திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளி மற்றும் நீலகிரி மாவட்டம் உதகை ஆகிய நான்கு தோட்டக்கலை பயிற்சி மையங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், தோட்டக்கலைத் துறை களப்பணியாளர்களுக்கும் நவீன தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. 2011-2012 ஆம் நிதி ஆண்டில் ரூ6.97 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 6400 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 2012–2013 ஆம் நிதி ஆண்டில் 6400 விவசாயிகள் / களப்பணியாளர்களுக்கு ரூ.19.20 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2012–2013ஆம் ஆண்டில் சிறப்புத் திட்டமாக குறைந்த தனி நபர் வருவாய் உள்ள கடலூர் தருமபுரி சிவகங்கை, கிருஷ்ணகிரி, விழுப்புரம், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் திருவண்ணாமலை ஆகிய எட்டு மாவட்டங்களில் விவசாயிகள், களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ரூ.110 இலட்சத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ் பயிற்சி அளிக்கப்படும். தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.150 இலட்சம் செலவினத்தில் தளி, தோட்டக்கலைப்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படவுள்ளது.

### 5.3 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி இன விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் தரமான மா, வாசனைப் பயிர்களான, மிளகு மற்றும் மலைத் தோட்டக்கலைப் பயிர்களான காபி ஆகியவற்றின் நடவுச் செடிகளும், 90 சத மானியத்தில் உயர் விளைச்சல் மற்றும் வீரிய



ஒட்டு காய்கறி விதைகளும் வினியோகிக்கப்படுகிறது. ஆயில் என்ஜின் மற்றும் பயிர் பாதுகாப்பு கருவிகள் 75 சத மானியத்தில் பழங்குடி இன விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. அறிமுகச் சுற்றுலா ஏற்பாடு செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. 2011–2012ஆம் நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 907 எக்டரில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம், 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ40.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1000 எக்டர் பரப்பில் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்துடன் சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சத மானியம் தேசிய நுண்ணீர் பாசன இயக்கத்தின்கீழ் வழங்கப்படவுள்ளது.

### 5.4 மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்/மலைப்பகுதி மேம்பாடுத் திட்டம்

விவசாயிகள் குழுக்களை ஊக்குவித்தல், கூட்டுறவின் மூலம் இடுபொருள் பெறுதல், இயந்திரங்களை வாடகைக்கு பயன்படுத்துதல், செய்திகள் மற்றும் அனுபவங்கள் மற்றும் தகவல்களை பகிந்து கொள்ளுதல், சான்று பெறுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விவசாயிகள் சேவையோடு கூடிய தொழில் முனைப்பு நிலை மூலமாக அரசின் சேவைகள் மற்றும் மானியங்கள் கிடைக்கச் செய்தல், தேவையின் அடிப்படையில் தொழில்நுட்பங்களை வழங்குதல் ஆகியவைகளே இந்த திட்டங்களின் நோக்கமாகும்.

நீர் வடிப் பகுதிகளின் அடிப்படையில் விவசாயக் குழுக்கள் வாயிலாக நீடித்த தோட்டக்கலையை ஊக்குவிப்பதே இத்திட்டங்களின் குறிக்கோளாகும். உழவர் தொகுப்புகள் உருவாக்குதல், குழுக்கள் மற்றும் உழவர் மேல்மட்டக்குழுக்களை முன்மாதிரி அடிப்படையில் உருவாக்கி அவற்றின் மூலம் இடுபொருள், கருவிகள் விநியோகம், இடுபொருள் உற்பத்தி, கால்நடைகள் வளர்ப்பு ஆகியவை திட்டக்கோட்பாடுகளுக்கேற்ப அதாவது பாகுபாடற்ற வாழ்வாதாரத்திற்கான ஒருமித்த குழு அமைத்தல்.

மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உயர் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. **2012–2013** ஆம் நிதியாண்டில் ரூ.**186.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் **1000** எக்டர் பரப்பில் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தின் குறு மற்றும் சிறுவிவசாயிகளுக்கு உயர் விளைச்சல், வீரிய ஒட்டு காய்கறி விதைகள், ஆயில் இன்ஜின், தெளிப்பான்கள், சிறிய டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர் போன்ற வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவை 25% – 50% சத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் **2011–2012** ஆம் ஆண்டில் ரூ.**206.800** இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது, **2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**240** இலட்சம் செலவில் **4000** எக்டர் பரப்பில் **50%** மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 5.5 நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம்

சென்னை நகர மக்களுக்கு தேவையான தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும், இத்திட்டத்தின் மூலம் சென்னை நகர் வாழ் மக்களுக்கு செடிகள், விதைகள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் முழு விலையில் விநியோகிக்கப்படுவதுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. **2011–2012**ஆம் நிதியாண்டில் ரூ.**3.50** இலட்சம் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. **2012–2013**ஆம் ஆண்டில் அரசு இத்திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ரூ.**25** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதுடன் தோட்டக்கலை கிடங்குகள் வசதிகளை மேம்படுத்துவதற்கு அண்ணாநகர், கே.கே. நகர், பெரம்பூர் மற்றும் திருவான்மியூர்



கிடங்குகளுக்கு ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5.6 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையில் 4% வளர்ச்சியை எய்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். **2011–2012**ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.**4434.83** இலட்சம் நிதியுதவியுடன் கீழ்வரும் திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டன.

1. துல்லிய பண்ணையம்
2. உயர் தொழில்நுட்ப உயர்விளைச்சல் திட்டம்
3. பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம்
4. மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேற்கூறிய திட்டக்கூறுகளுடன், மஞ்சள் மற்றும் மரவள்ளி அறுவடை, பதப்படுத்துதலை இயந்திரமயமாக்குதல், தானே ‘புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்லாண்டு பயிர்களுக்கு இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்பு உதவி வழங்குதல், பந்தல் காய்கறி சாகுபடியை ஊக்குவித்தல், மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் பயிற்சி மையம் ஏற்படுத்துதல், அரசு தோட்டக்கலை பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய துணைத் திட்டக் கூறுகள் முன்மொழியப்பட்டுள்ளன. இத்திட்டம் **2012–2013** ஆம் ஆண்டில் **21410** எக்டேர் பரப்பளவில் ரூ.**10838** இலட்சம் நிதியுதவியுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.7 துல்லிய பண்ணையம்

இத்திட்டம் 2008ஆம் ஆண்டு முதல் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் வியக்கதகு உற்பத்தி திறன் அதிகரிப்பு (30–50 சத அதிகரிப்பு) எய்தப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி அதிகரிப்பு உயர் விளைச்சல் மற்றும் கலப்பின விதைகளை பயன்படுத்துதல், நுண்ணீர்பாசனம் மற்றும் பாசன வழி உரமிடுதல் போன்ற உயர் தொழில்நுட்பங்களை காய்கறிகள், மஞ்சள் மற்றும் வாழை ஆகிய பயிர்களில் பயன்படுத்தியதன் மூலம் அடையப்பட்டுள்ளது. இத்திட்டம்

விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்ற திட்டமாகும். 2011–2012ஆம் ஆண்டு இத்திட்டம் 2858 எக்டர் பரப்பளவில் ரூ.600.18 இலட்சம் நிதியுடன் 50 சத மான்யத்தில் எக்டருக்கு ரூ.20,000–க்கு மிகாமல் செயல்படுத்தப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டில் 6000 எக்டர் பரப்பளவில் 1260 இலட்சம் நிதியுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**5.8 உயர் தொழில்நுட்ப உயர்விளைச்சல் திட்டம்**

அடர் நடவு, மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்களை மேற்கொள்ளுதல், உயர்விளைச்சல்/ கலப்பின விதைகளைக் கொண்டு காய்கறிகளை உற்பத்தி செய்தல் போன்ற உயர் தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன்மூலம் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 2011–2012ஆம் ஆண்டு 3646 எக்டர் பரப்பளவில் ரூ.1255.14 இலட்சம் நிதியுடன் 50 சத மான்யத்தில் செயல்படுத்தப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டில் 7745 எக்டர் பரப்பளவில் ரூ.1030.93 இலட்சம் நிதியுடன் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**5.9 மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மானாவாரி பகுதிகளில் புதிய உயர் தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியினை பெருக்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. தோட்டக்கலை அடிப்படையிலான பண்ணை முறைகள், தேனீ வளர்ப்பு, பசுமை குடில் சாகுபடி ஆகியவை இந்த உபதிட்டத்தின் கூறுகளாகும். இத்திட்டம் 2011–12ஆம் ஆண்டு 2655 எக்டர் பரப்பளவில் ரூ.879.05 நிதியுடன் 50 சத மான்யத்தில் செயல்படுத்தப்பட்டது. 2012–13ஆம் ஆண்டில் 2300 எக்டர் பரப்பளவில் ரூ.772 இலட்சம் நிதியுடன் இத்திட்டத்தை செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**5.10 பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டம்**

பெருநகர மக்களுக்கு தொடர்ச்சியாக காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு கிராமப்புறங்களையும்



நகர்ப்புறங்களையும் இணைப்பதற்கான உள்ளீட்டு வசதிகளை ஏற்படுத்துதல் அத்தியாவசியமாகும். இவ்வாறு செய்வதன்மூலம் நகரங்களை சுற்றியுள்ள கிராம மக்கள் உயர்வருவாய் பெற இயலும். விவசாயக் குழுக்களை ஏற்படுத்தி அக்குழுக்களின் விளைப்பொருட்கள் மாவட்ட அளவிலான விவசாயிகள் சங்கங்களுக்கு வழங்கப்படும். தனியார் தொழில்முனைவோரின் ஒத்துழைப்புடன் இவ்விளைப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு தரம்பிரிக்கப்பட்டு பாலித்தீன் பைகளில் சிப்பமிட்டு நகரங்களில் ஏற்படுத்தப்படும் சில்லரை காய்கறி அங்காடிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும். காய்கறிகள் சாகுபடி செய்தல், விவசாய குழுக்கள் அமைத்தல், விவசாயிகள் சங்கம் அமைத்தல், காய்கறிகள் சேகரிப்பு மையம் அமைத்தல், காய்கறிகளை கொண்டுவருவதற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்கள், சில்லரை விற்பனை அங்காடிகள் மற்றும் நடமாடும் அங்காடிகள் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

2011–2012ம் ஆண்டில் இத்திட்டம் சென்னை நகருக்கு மட்டும் ரூ.1700 இலட்சம் செலவில் சென்னை நகரில் செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டில் கோவை நகரத்தில் ரூ.1701 இலட்சம் நிதியுடன் 2162 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5.11 தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம்**

தேசிய வேளாண்மை காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களான வாழை, வெங்காயம், உருளைக்கிழங்கு, மரவள்ளி, அன்னாசி மற்றும் இஞ்சி ஆகிய பயிர்களுக்கு காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

இயற்கை பேரழிவுகள், பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்களில் பேரழிவு ஏற்படும் போது அவற்றிற்கு காப்பீடு வழங்குவதும் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதும் இத்திட்டத்தின்

முக்கிய குறிக்கோள் ஆகும். இதன் மூலம் விவசாயிகள் பேரழிவு காலங்களில் பண்ணை வருமானத்தை ஈடுகட்ட இயலும்.

விவசாயிகளுக்கு சந்தா தொகையில் 50% மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. 2011–2012ம் நிதியாண்டில் இத்திட்டம் ரூ.950 லட்சம் நிதியுடன் 24000 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. 2012–2013ம் நிதியாண்டில் இத்திட்டம் ரூ.950 லட்சம் நிதியுடன் 24000 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

**5.12 வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டம்**

இயற்கை சீற்றம் அல்லது எதிர்பாராத வானிலை இன்னல்களினால் (வறட்சி / வெள்ளம்) ஏற்படும் வருமான குறைவினையும் அதனால் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்களையும் குறைப்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டம் தமிழகத்தின் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் பரிட்சார்த்த ரீதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் கடன் பெற்ற விவசாயிகள் தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற இயலாது. கடன்பெறாத விவசாயிகள் இரு திட்டங்களிலும் பங்கு பெறலாம். 2011–2012ம் நிதியாண்டில் இத்திட்டம் ரூ.52.5 லட்சம் நிதியுடன் 4132 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டது. 2012–13 நிதியாண்டில் இத்திட்டம் ரூ.52.5 லட்சம் நிதியுடன் 4132 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

**5.13 பகுதி 2 திட்டம்**

2011–2012ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.110 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதன்கீழ் ரூ.30 இலட்சம் செலவில் மாதவரம் தோட்டக்கலை பயிற்சி மையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. தலா ரூ.20 இலட்சம் செலவில் ஈரோடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையங்கள் அமைக்கவும், ரூ.40 இலட்சம் செலவில் தோட்டக்கலை பயிற்சி



நிலையம் தளியில் பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ஒதுக்கீடு பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.

2012–2013 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் தர்மபுரியில் மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட உள்ளது. மேலும் தோட்டக்கலைத்துறைக்கென தனிப்பட்ட இடுபொருள் சேமிப்புக்கிடங்கு எந்த வட்டாரத்திலும் இல்லாததால் முதன் முதலாக, கோயம்புத்துார் மாவட்டம், தொண்டாமுத்துார் வட்டாரத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் தோட்டக்கலை விரிவாக்க மையத்துடன் கூடிய இடுபொருள் சேமிப்புக்கிடங்கு ஒன்று அமைக்கப்பட உள்ளது. திருச்சி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையங்களை தலா ரூ. 10 இலட்சம் செலவில் விரிவு படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 75 இலட்சம் மாநில திட்டக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

**5.14 இலக்கு மற்றும் சாதனை**

மாநில அரசுத் திட்டங்களில் 2011–2012ஆம் நிதிஆண்டில் நிதி ஒதுக்கீடு, மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2012–2013 ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

மாநில அரசு திட்டங்கள் ( நிதி: ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்களின் பெயர் | அலகு | 2011–2012 | | | | 2012–13 (முன்மொழியப் பட்டது) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | இலக்கு |
| 1 | ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் | எக்டர் | 26583 | 26583 | 371.18 | 371.18 | 75000 | 1925.00 |
| 2 | தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள் | எண் கள் | 6400 | 6400 | 6.97 | 6.97 | 6400 | 19.20 |
| 3 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | எக்டர் | 907 | 907 | 40.00 | 40.00 | 1000 | 40.00 |
| 4. | மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத் தித் திட்டம் | எக்டர் | 0 | 0 | 0 | 0 | 1000 | 186.00 |
| 5 | மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் | எக்டர் | 4000 | 4000 | 206.80 | 206.80 | 4000 | 240.00 |
| 6 | நகர காய்கறி அபிவிருத்தி திட்டம் | எக்டர் | 200 | 200 | 3.50 | 3.50 | 200 | 100.00 |
| 7 | தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் | எக்டர் | 16671 | 9502 | 4434.83 | 2511.86 | 21410 | 10838.00 |
| 8 | தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் | ஏக்கர் | 24000 | 24000 | 950.00 | 566.52 | 24000 | 950.00 |
| 9 | காலநிலை அடிப் படையிலான பயிர் காப்பீட்டு திட்டம் | ஏக்கர் | 4132 | 4132 | 52.50 | 43.28 | 4132 | 52.50 |
| 10 | திட்டம் II | | | | 110.000 | 110.000 | | 75.00 |
| | **மொத்தம்** | | | | **6175.78** | **3860.11** | | **14425.70** |



**5.15. தானே புயலால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு சிறப்பு நிவாரணம்**

தமிழகத்தில் **30.12.2011** அன்று வீசிய தானே புயலினால் **48040.90** எக்டர் சாகுபடி பரப்பளவில் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்து **70366** விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. போர்கால அடிப்படையில் பயிர்சேத விபரங்கள் கணக்கிடப்பட்டு ரூ.**4148** இலட்சம் பயிர் இழப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வினை புணரமைக்கும் நோக்கில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.**72496** இலட்சம் மதிப்பில் சிறப்புத் தொகுப்புத் திட்டத்தினை அறிவித்தார்கள். இச்சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டுப் பயிர்கள் மறு சாகுபடி மற்றும் **4** ஆண்டுகளுக்கு பராமரிப்புடன் கூடிய பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களுக்கு மீண்டும் நடவு செய்தல் ஆகியவை கீழ்க்காணும் செயல்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்படும்

1. விழுந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்துதல்
2. விழுந்த மரங்களை வெட்டுவதற்கு இயந்திரம் கொள்முதல் செய்தல்
3. வெட்டி எடுக்கப்பட்ட மரங்களின் அடிக்கட்டைகள் எடுத்தல்
4. உழவு பணிகள்
5. குழிகள் எடுத்தல் மற்றும் குழிகள் நிரப்புதல்
6. மறுசாகுபடி மேற்கொள்ளுதலும் – ஆண்டுப் பயிர்கள் மற்றும் பல்லாண்டுப் பயிர்கள்
7. ஊடுபயிர் சாகுபடி
8. நீர்பாசன வசதி அளித்தல்
9. நுண்ணீர் பாசனம்

இச்சிறப்புத் தொகுப்புத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்தும் நோக்கில் தமிழக அரசு கடலூர் மாவட்டத்தில் திட்ட மேலாண்மை மையம் ரூ.**203.48** இலட்சம் செலவில் அமைக்க ஆணையிட்டுள்ளது.

முந்திரி, பலா, மா போன்ற பல்லாண்டு பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் வட்டார மேலாண்மை மையம் அமைக்கப்படும். தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள் ஓராண்டு காலம் பணிமாறுதல் அடிப்படையில் பணியாற்றிட ஏதுவாக 64 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஓராண்டு காலம் தற்காலிகமாக பணிபுரிவதற்கு ஏதுவாக 62 தற்காலிக பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பணியிடங்கள் ஒப்பந்த முறையில் பூர்த்தி செய்யப்படும். திட்ட மேலாண்மை மையம் மற்றும் வட்டார மேலாண்மை மையம் ஆகியவற்றிற்கு தேவையான உள்ளீட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்திலிருந்து ரூ.2524.818 இலட்சம் நிதியினை தானே புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறுதளைகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், சேதமடைந்த பல்லாண்டு பயிர்கள் பரப்பில் ஊடுபயிர் சாகுபடி செய்வதற்கு உழவு மேற்கொள்ள எக்டருக்கு ரூ.1000 வீதம் ரூ.365.17 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

புயலால் கீழே விழுந்த மரங்களின் வேர்ப்பகுதிகளை முழுவதும் அப்புறப்படுத்தி அதன் பின்னர் உழவு மேற்கொள்வதற்கு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பின்னேற்பு உதவி தொகையாக எக்டருக்கு ரூ.25000/– வீதம் வழங்க அரசு ரூ.9129.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. பாதிக்கப்பட்ட மரங்களின் வேர்ப்பகுதியினை விவசாயிகள் தாங்களாகவே முழுமையாக அகற்றி, உழவுப் பணிகளை மேற்கொண்ட பின்னர், பின்னேற்பு தொகையாக எக்டருக்கு ரூ25000/– பெற்றுக் கொள்ளவும், அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழே விழுந்த மரங்களை வெட்டி எடுத்து அதன் வேர்ப்பகுதிகளை முழுவதும் அப்புறப்படுத்தி, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எக்டருக்கு ரூ.1000



செலவினத்தில் உழவுப்பணிகளை வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

இத்திட்ட மேலாண்மை மையம் கூடுதல் ஆட்சி தலைவரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் வேளாண்மை பயிர்களுக்கான சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்துதல், சிறப்புத் தொகுப்புத் திட்டச் செயல்பாட்டினை நிர்வகித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், உரிய காலத்தில் சிறப்புத் தொகுப்புத் திட்டங்களை விவசாயிக்கு எடுத்துச் செல்லுதல், பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்தல், திட்ட செயல்பாட்டிற்கான முன்னேற்ற அறிக்கையினை தொடர்புடைய துறை இயக்குநரகத்திற்கு அனுப்புதல் ஆகிய பணிகளுடன் செயல்பட்டு வருகிறது.